**OPEN ACCESS**

Manuscript ID:
TAM-06032022-4637

Volume: 6

Issue: 3

Month: January

Year: 2022

P-ISSN: 2454-3993

E-ISSN: 2582-2810

Received: 16.10.2021

Accepted: 08.12.2021

Published: 01.01.2022

Citation:
Mangaiyarkkarasi, G. "Game of Ball Play by Women in Literature." *Shanlax International Journal of Tamil Research,* vol. 6, no. 3, 2022, pp. 130–36.

DOI:
https://doi.org/10.34293/tamil.v6i3.4637

*Corresponding Author:
gmangaichennai@gmail.com

This work is licensed under a Creative Commons Attribution-ShareAlike 4.0 International License

# Game of Ball Play by Women in Literature

**Dr. G. Mangaiyarkkarasi**
*Assistant Professor, Department of Tamil*
*A. M. Jain College, Meenambakkam, Chennai, Tamil Nadu, India*

**Abstract -** In Tamil literature, women's games are said to be punalatu, vattututal, kalangkatutal, orayatutal, pendulum, vandalilaittal, pavai game, tayam and many other games, but it is better to play ball. Let's explore 'Women's Bowling in Literature'.
**Keywords:** Women, Ball, Eyes, Arms, Legs, Games.

**References**

1. Ilampooranar Text. 1953. *Tholkappiyam-Ethics*. Chennai, Tirunelveli South Indian Saiva Siddhanta Publication Co. Limited.
2. Nagarajan, V. 2004. *(A Text) Paththupaattu Source and Text.* Chennai, First two Volumes New Century Book House (Pvt) Ltd.
3. Balasubramanian, K.V. 2004. *(A Text), Nattrinai (Source & Text)*. Chennai, New Century Book House (Private) limited.
4. Balasubramanin, K.V. 2004. *(A Text) Puranaanuru (Source & Text),* Chennai, New Century Book House (Private) Limited.
5. Puliyur Kesikan. 2009. *Thirukutraala Kuravanji (Source & Text),* Chennai, Sarada Printers.
6. Poovannan. 2011. *Kambaramaayanam (Source & Text with explanation)*. Chennai, Volumes 1,2,3,4,5,6,7,8. Vardhaman Publications.
7. Viswanathan, A. 2004. *(Text A), Kalithogai (Source & Text),* New Century Book House (P) Ltd.
8. Sri. J. Chandran. 2012. *Silappathigaaram (Source & Text with explanation)*. Chennai, Tamil Nilayam.

# பழந்தமிழ் இலக்கியப் படைப்புக்களில் மகளிர் பந்து விளையாடுதல்

***முனைவர். க. மங்கையர்க்கரசி***
உதவிப் பேராசிரியர், தமிழ்த் துறை
அகர்சந்த் மான்மல் ஜெயின் கல்லூரி, சென்னை

***ஆய்வுச் சுருக்கம்***
*தமிழ் இலக்கியங்களில் மகளிர் விளையாடும் விளையாட்டுகளாகப் புனலாடுதல், வட்டாடுதல், கழங்காடுதல், ஓரையாடுதல், ஊசல், வண்டலிழைத்தல், பாவை விளையாட்டு, தாயம் என்று பல விளையாட்டுகள் கூறப்பட்டாலும் பந்து விளையாடுதல் குறித்துச் சிறப்பாகக் கூறப்பட்டுள்ளது. “இலக்கியங்களில் மகளிர் பந்து விளையாடுதல்” பற்றி இக்கட்டுரை ஆராய்கிறது.*
***முக்கியச் சொற்கள்:*** *தமிழ் இலக்கியம், மகளிர் விளையாட்டு பெண்கள், பந்து, கண்கள், கைகள், கால்கள்.*

**விளையாட்டு குறித்துத் தொல்காப்பியர்**

விளையாட்டு என்பதற்கு சரியான வரையறைக் கிடைக்கவில்லை. தொல்காப்பியர் விளையாட்டைப்பற்றி,

**“செல்வம் புலனே புணர்வு விளையாட்டென**
**அல்லல் நீத்த உவகை நான்கே”**
***(தொல்காப்பியம்- மெய்ப்பாட்டியல் நூ11)***

குறிப்பிடுகிறார்.

உவகை என்னும் மெய்ப்பாடு தோன்றும் நான்கு நிலைக்களன்களில் ஒன்று.

**“கெடவரல் பண்ணை ஆயிரண்டும் விளையாட்டு”**
***(சொல்லதிகாரம்- உரியியல்319)***

கெடவரல் என்பது நிலத்தில் விளையாடும் விளையாட்டு.

பண்ணை என்பது நீரில் விளையாடும் விளையாட்டு.

**பந்துவகை**

வரிப்பந்து, வரிப்புனை பந்து, வரியணிபந்து ஆகியவை பந்தாட்டத்துக்கு பயன்படுத்தப்பட்டன.

**“வரிப்புனைப் பந்தொடு பாவைதூங்க”**
***(திருமுறுகாற்றுப்படை 68)***

**“விண்தோன் வரைபந்து எறிந்தயாவீடத்**
**தண்தாழ் அருள அரமகளிர் ஆடுபவே”**
***(கலித்தொகை 40:22)***

**பந்து விளையாடும் இடம்**

திருப்பரங்குன்றம் நீர்ப்பெயற்று என்னும் துறைமுகப்பட்டினம், அருவிக்கரை முதலான இடங்களில் பந்து விளையாட்டு விளையாடுகின்றனர்.

**“நுந்தை தொல்வியநகர் இளமையான்**
**எறிபந்தொடு இகத்தந்தாய்”**
***(கலித்தொகை 57:7)***

**“தந்தை நெடுந்தேர் வழங்கும் நிலவு மணல்முற்றத்து**
**பந்தொடு பெயரும் பரிவிலாட்டீ”**
***(நற்றிணை 140-7)***

**“தந்தை இடனுடை வரைப்பின்...**
**ஆடுபந்து உருட்டுநள் போர் ஓடி”**
***(நற்றிணை324-7)***

என்ற பாடலடி மூலம் அறியமுடிகிறது.

**பூப்பந்து**

இலையோடு கூடிய பூக்களைச் சுருட்டி கட்டிச் செய்து பூப்பந்து விளையாடினர் என்பதை,

**"புலராப் பச்சிலை இடையிடுபு தொடுத்த
மலரா மாலைப்பந்து கண்டன்ன
ஊன் சற்று அமலைபாண கடும்பு இருந்தும்"**
***(புறநானூறு 33-13)***

என்ற பாடலடி மூலம் அறியமுடிகிறது.

வளைந்த வயலைக் கொடியை கன்று போட்ட பசு தின்றுவிட்டதென்று தான் விளையாடிய பந்தையும், பாவையையும், நிலத்திலே எறிந்துவிட்டு ஒரு சிறுமி வயிற்றில் அடித்துக்கொண்டாள் என்பதை,

**"இல் எழுவயலை ஈற்று ஆ தின்றென
பந்து நிலத்து எறிந்து, பாவை நீக்கி,
அவ் வயிறு அளித்த என் செய் வினைக்
குறுமகள்"**
***(நற்றிணை 179:1-3)***

பாடல்வரி மூலம் அறியமுடிகிறது.

**பந்தாடுதல்**

**"பந்து ஆடு மகளிரின் படர்தரும்
குன்று கெழு நாடனொடு"**
***(ஐங்குறுநூறு 295)***

**பந்தும் பாவையும் கிழங்கும் எமக்கு
ஒழித்தே"**
***(ஐங்குறுநூறு 377)***

பெண்கள் பூக்களைக் கொண்டு பந்தாடினர் என்பதை, ஐங்குறுநூறு கூறுகிறது.

**நூல்பந்து**

நூலினால் வரிந்து கட்டப்பட்ட ஒரு வகையான பந்தினைக்கொண்டு ஆடுதல் அன்றைய வழக்கமாக இருந்தது. மாடிவீடு களில் மேல் மாடங்களில் பெண்கள் வரிப்பந்தாடியது பற்றி,

**"பீலி மஞ்ஞையின் இயலிக் கால
தமனியப் பொற்சிலம் பொலிப்ப உயர்நிலை
வான்தோய் மாடத்து வரிப்பந்து அசைஇக்"**
***(பெரும்பாணாற்றுப்படை 331-333)***

என்பதன் மூலம் அறியமுடிகிறது.

**மகள் பந்து வைத்து விளையாடல்**

உடன்போக்கு சென்ற மகளை நினைத்துத் தாய் வருந்துமிடத்து தோழி விளையாடிய இறுக்கிக் கட்டிய பந்தும்,தன் மகள் சிற்றில் அமைத்து விளையாடிய இடமும் வீட்டின் எதிரே உள்ளன.

**"வரியணிபந்தும் வாடிய வயலையும்
மயிலடியன்ன மாக்கிரல் நொச்சியும்"**
***(நற்றிணை 305:1-2)***

காலால் பந்து விளையாடும் உதைக்கும் காட்சியை

**"ஆடுபந்து உருட்டுநர் போல ஓடி
அஞ்சில் ஓதி இவளுரும்"**
***(நற்றிணை 324:7-8)***

என்ற பாடலடி மூலம் அறியமுடிகிறது.

**பந்தைப் பரித்துக்கொண்டு ஓடுதல்**

கலித்தொகையும், மகளிர் பந்து விளையாடியதைக் கூறுகிறது.

**"மணற்சிற்றில் காலின் சிதையா அடைச்சிய
கோதைப் பரிந்து வரிப்பந்து கொண்டு ஓடி
நோ தக்க செய்யும் சிறுபட்டி"**
***(கலித்தொகை 51)***

தெருவில் சிறுமியர் வீடுகட்டி விளையாடுவர். அந்த விளையாட்டை சிறுவர்கள் காலால் உதைத்தும், அச்சி றுமியர் பூ மாலையை இழுத்தும், பந்தைப் பரித்துக் கொண்டு ஓடியும் வருந்தச் செய்ததை விளக்குகின்றன.

**சீவகசிந்தாமணியில் பந்து விளையாடல்**

மயிலொத்த பெண்கள் தத்தம் கைகளை வலப்பக்கமும், இடப்பக்கமும் அசைத்தும் தத்தம் தோழிமார் இடை வளைந்தோடிப் பந்தாடுவதாக திருத்தக்கதேவர்,

**"துணையிி நோகைமஞ்ஞை யீயற்
கிவரும் வகை போல்
மணியார் வளைசேர்முன் கை வலனு
மிடனும் போக்கி
இணைய றோழி மார்க்
ளிநுமாலிடையென் றிரங்க
அணியார் கோதை பூப்பந்தாடு மவளைக்
காண்மின்**
***(குணமாலையார் இலம்பகம் 925)***

என்று சீவகசிந்தாமணியில் குணமாலை பந்து விளையாடியதைக் குறிப்பிடுகிறார்.

**விமலை பந்து விளையாடல்**

இராசமாபுரத்து வீதிகளின் அழகைக் காண சீவகன் சென்றுகொண்டிருந்தான். விமலை என்றப் பெண் பந்தை வைத்து விளையாடிக் கொண்டிருந்தாள். அவள் பந்து விளையாடியதை,

**"அங்கையந்த லத்தகத்த ஐந்து பந்த மர்ந்தவை**
**மங்கையாட மலை சூழும் வண்டுபோல வந்துடன்**
**பொங்கி மீதெழுந்து போய்ப் பிறழ்ந்து பாய்தல் இன்றியே**
**செங்கயற்கண் புருவம் தம் முளுவம் செய்யத் திரியுமே**
**(விமலையார் இலம்பகம் 1953)**

என்ற பாடலடி மூலம் அறியமுடிகிறது.

மேலே அடிக்கப்பட்ட பந்துகள் சில அவளுடைய முல்லை மாலையில் மறைந்தன. பின்பு அவள் கையை வந்தடைந்தன. கருங்கூந்தலைத் தாண்டிப் பறந்த பந்துகள், முகத்தருகே வந்தன. தலையில் மறைந்தவை மார்பில் மாலையருகே வந்து சேர்ந்தன. சில கை விரல்களில் அமர்ந்தன. இவ்வாறு பந்துகள் எங்கே என்று காண்பவர் வியக்கும்படி அவற்றை வீசியும், அடித்தும் வேகமாக விமலை ஆடினாள். வேகமாக அவள் ஆடியதால் மார்பில் பூசிய குங்குமமும், பொற் சுண்ணமும், நெற்றிச்சந்தனமும் வியர்வையில் கரைந்து, அவர் மார்பிடையே வழிந்தோடியது. ஆடி ஆடி அவளும் சிறிது தளர்ச்சியடைந்தாள்.அவள் கையிலிருந்த பந்து நழுவி மார்பிலணிந்த முத்து மாலையைத் தொட்டு வீதியில் சென்று கொண்டிருந்த சீவகன் முன்பு விழுந்தது.

**பாஞ்சாலி பந்து விளையாடல்**

பாஞ்சாலியின் வஞ்சினத்தை நிறைவேற்ற வேண்டியே, கண்ணன் மகாபாரதப் போரைத் துவக்கினான் என்கிறார் திருமழிசையாழ்வார்.

**"பந்துஆர் விரலான் பாஞ்சாலி**
**கூந்தல் முடிக்க பாரதத்து**
**கந்துஆர் களிற்றுக் கழல் மன்னர்**
**கலங்க சங்கம் வாய் வைத்தான்**
**(நாலாயிரதிவ்யபிரபந்தம் 575)**

இங்கே பாஞ்சாலியைப் பந்து ஆர் விரலாகென்று அன்று பெண்கள் பந்தாடிய செய்தியைக் குறிப்பிடுகிறார்.

**சிலப்பதிகாரத்தில் பந்து விளையாடல்**

மகளிர் பந்தாடுதல் குறித்து சிலம்பில் வஞ்சிக்காண்டம் வாழ்த்துக்காதையில் கூறப்பட்டுள்ளது.

**"பொன்னிலங்கு பூங்கொடி பொலம்செய்கோதை வில்லிட**
**மின்னிலங்கு மேகலைகள் ஆர்ப்பவார்ப்ப எங்கணும்**
**தென்னவன்வாழ்க வாழ்கவென்று செ ன்றுபந் தடித்துமே**
**தேவார மார்பன் வாழ்க என்று பந்து அ னத்தும் ச**
**(சிலப்பதிகாரம்- வஞ்சிக்காண்டம்- வாழ்த்துக்காதை 20)**

பொற்கொடி போன்றவளே பொன்னால் செய்த மாலை ஒளி வீச, மின்னல் போல விளங்கும் நமது மேகலை அணிகள் அசைந்தாட இந்தப் பந்தாடு களத்தில் எங்கும் சென்று, "பாண்டியன் வாழ்க! வாழ்க! என வாழ்த்திப் பந்தடிப்போமா, தேவர்களது ஆரம்பூண்ட மார்பன் வாழ்க! வாழ்க! என வாழ்த்திப் பந்தடித்து நாம் ஆடுவோமாக" என்கிறாள்.

மின்னும் கொடி மின்னலானது பெரிய நிலத்தில் இறங்கி வந்தது போல முன்னும் பின்னும்,எங்கணும் சென்று மகிழ்ச்சியுடன்

உலாவி "பாண்டியன் வாழ்க! வாழ்க! என வாழ்த்திப்பந்தடிப்போமாக! தேவர்களது ஆரம்பூண்ட மார்பன் வாழ்க! வாழ்க! என வாழ்த்திப் பந்தடித்து நாம் ஆடுவோமாக" என்கிறாள்.

விரைந்து வந்து கையிலே இருந்தாலும் இல்லை. நீண்ட நிலத்திலிருந்து அந்தரத்தே எழுந்ததும் இல்லை என்று கூறும்படி "பாண்டியன் வாழ்க! வாழ்க! என வாழ்த்திப் பந்தடிப்போமாக! தேவர்களது ஆரம்பூண்ட மார்பன் வாழ்க! வாழ்க! என வாழ்த்திப் பந்தடித்து நாம் ஆடுவோமாக" என்கிறாள் பெண்கள் பந்து விளையாடியதை சிலப்பதிகாரம் மூலம் அறியமுடிகிறது.

### பெருங்கதையில் பந்தாடல்

ஒருநாள் உதயணனின் மனைவிமார்கள் வாசவதத்தைக்கும், பதுமாவதிக்கும் இரவில் நிலாமுற்றத்தில் பெண்களுக்கிடையே பந்து விளையாட்டுப் போட்டி நடைபெற்றது. இப்போட்டியில் இரண்டு அணிக ளாகப் பிரிந்து நின்றார்கள். ஆனால் ஆட்கள் குறையவே மன்னன், தேவியர் இருவருக்கும் தான் போரில் வெற்றி பெற்று கூட்டிவந்த ஆயிரத்தெட்டுப் பெண்களையும் சரிபாதியாகப் பிரித்துக் கொடுத்தான். இவ்வாறு பந்தாட்டப்போட்டி நடைபெறத் தேவையான ஆட்களை இருவரும் பிரித்துக் கொண்டார்கள். அவர்களுள் மானனீகையும் ஒருத்தி. பந்தாடும் பெண்கள் அனைவரும் நெட்டியும், பஞ்சும், பட்டு நூலும் சேர்த்து உருட்டிக் கட்டிக்கொண்டனர். முடியை நன்றாகப் பின்னி அவற்றின் மேல் நூலாலும், கயிற்றாலும் மெல்லியதாய்ச் சுற்றி பாம்புத் தோல் போலவும், மயில்த்தோகையின் கண் போலவும் சுற்றிக்கொண்டனர். இராசனை, காஞ்சனமாலை, அயிராபதி, விச்சுவலோகை, ஆரியைப் போன்ற பெண்களுக்குப் பிறகு மானனீகை பந்தடிக்க வருகிறாள்.

**"பீலியம் மயிரும் வாலிதின் வலந்து**
**நூலினுங் கயிற்றினு நூண்ணிதிற் சுற்றிக்**
**கோலமாகக் கொண்டனர் பிடித்துப்**
**பூம்புன னுரையும் புரையக் குத்தி"**

***(பெருங்கதை- வத்தவக் காண்டம்-12:44-48)***

மானனீகை இருபத்தியொரு பந்துகளை எடுக்கிறாள்.தான் நடுவில் நின்று, பந்துகளைத் தன்னைச் சுற்றிலும் வட்டமாக வைக்கிறாள். பின் பந்தை வானத்தை நோக்கி அடிக்கிறாள். மீண்டும் வந்த பந்தை நிலத்தில் அடிக்கிறாள். பந்து மேலே எழும்பும்போது, தானும் மேலே எழுகிறாள். பந்தடிப்பதற்கு ஏற்ப அவளது கைகளும், கால்களும் உடலும், கண்ணும் புருவமும் அசைகின்றன. அவள் இருபத்தியொரு பந்துகளை எடுக்கிறாள். மானனீகை பந்தடிக்குப்போது, பாடல் மகளிர் நூல்களிற் கூறப்பட்ட வண்ணம், தாளம் தவறாது கை களால் தாளம் இடுகின்றனர். அவளுடைய செயல்த்திறனைக் கண்டு ஏனைய பந்தாடும் மகளிர்கள் பாராட்டுகின்றனர். உதயணனின் மனைவிமார்கள் அவளைக் கண்டு திகைத்து நிற்கின்றனர்.பந்துகள் சுழலும் வேகத்தில் அவளும் சேர்ந்து சுழலுவதால் அவள் இருக்கும் இடம் அறியாத தோழிமார்கள் இது என்ன மாயமோ என்று வியக்கின்றார்கள். இதனை,

**"சுழன்றன தாமங் குழன்றது கூந்தல்**
**அழன்றது மேனி யவிழ்ந்தது மேகலை**
**எழுந்தது குறிவிய ரிழிந்தது புருவம்**
**ஓடின தடங்கண் கூடின புருவம்**
**அங்கேயே னேற்றம் புறங்கையி னோட்டியும்**
**தங்குற வளைத்துத் தான் புரிந்து தடித்தும்"**

***(பெருங்கதை 4:12; 225-230)***

என்ற பாடலடி மூலம் அறியமுடிகிறது

கூந்தல் சுருள்கிறது. உடல் வெதும்புகிறது. மேகலை அவிழ்கிறது. வியர்வையினால் சந்தனம் வழிகிறது. அகன்ற பெரிய கண்கள் அங்கும், இங்கும் ஓடுகின்றன. உள்ளங்கையால் பந்தை ஏற்று, புறங்கையால் பந்தைத் தட்டியும் உடம்பை வளைத்து ஆடுகிறாள். பெண்கள் மட்டுமே கூடி பந்தாடிகின்றனர் என்று பெருங்கதையின் ஆசிரியர் கொங்குவேளிர் குறிப்பிடுகின்றார்.

**குற்றாலக் குறவஞ்சியில் வசந்தவல்லி பந்தாடுதல்**

வசந்தவல்லி தன் தோழிகளுடன் சேர்ந்து பந்து விளையாடத் தொடங்கினாள். சங்கு வளையல் அணிந்த கைகள் சிவக்கும் படியாக நாலடி முன் தாவியும், பத்தடி பின் வாங்கியும் ஒய்யாரமாகப் பந்தாடினாள்.

வசந்தவல்லி பந்தடிக்கும் போது அவள் சிவந்த கைகளில் அணிந்துள்ள வளையல்கள் “கலீர் கலீர்” என்றும், “செயம் செயம்” என்றும் ஒலி முழங்கின. இடை இனி நிலைத் திருப்பது சந்தேகம் தான் எனச் சிலம்புகள் புலம்பின. சிலம்புடன் சேர்ந்து தண்டைகளும் புலம்பி ஒலி முழங்கின. கொங்கைகள் பந்தினை வென்றுவிட்டோம் எனக் குழந்தை போலக் குதித்து ஆடின. இப்படியாக வசந்தவல்லி பந்தாடினாள்.

காதணிகளுடன் கயல் மீனொத்த விழிகள் இரண்டும் நெருங்கிப் புரண்டுபுரண்டு ஆடிக்கொண்டிருந்தன. மேகம் போன்ற கூந்தலில் மொய்த்துக்கொண்டிருந்த வண்டுகள் கலைந்து போதலைக் கண்டு மன்மதனின் சிலை வண்டு ஓடியது. இவள் பந்தடிக்கும் நிலையைக் கண்டால் ஆடவர் என்ன பாடுபடுவாரோ என அவளுடைய இடை துவண்டாடியது. தாமரை மலரில் வீற்றிருக்கும் திருமகள் போன்ற வசந்தவல்லி அழகுடன் பந்து விளையாடினாள்.

**“செங்கையில் வண்டுகலின் கலினென்ற**
**செயஞ்செய**
**என்றாட-இடை**
**சங்கத மூன்று சிலம்பு புலம்பொடு தண்டை**
**கலந்தாட - இரு**
**கொங்கை கொடும்பகை வென்றன**
**மென்று குழைந்து**
**குழைந்தாட - மலர்ப்**
**பைங்கொடி நங்கை வசந்த சவுந்தரி பந்து**
**பயின்றாளே**
**பொங்கு கனங்குழை மண்டிய கெண்டை புரண்டு**
**பு ரண்டாடக்- குழல்**
**மங்குலில் வண்டு கலைந்தது கண்டு மதன்சிலை**
**வண்டோட- இனி**
**இங்கிது கண்டுல்கென்படு மென்படு மென்றிடை**
**திண்டாட- மலர்ப்**
**பங்கய மங்கை வசந்த சவுந்தரி... பந்து**
**பயின்றாளே**

**(குற்றாலக்குறவஞ்சி 1,2)**

சூடகம் அணியப் பெற்றிருக்கும் முன்கைகளில் அணிந்துள்ள வெள்ளிய வளையல்கள் தம் அருகே தோன்றக் கண்டு தோள் வளையல்களும் மேலெழுந்தாடின. அணிந்துள்ள பாடகமும், சிறுபாதச்சிலம்பு மேலும் கீழும் எழுந்தாடின.இவ்வாறு குற்றால வீதியில் அழகியபொன் கொடி போன்ற வசந்தவல்லி நடனம் ஆடும் மயிலைப் போலும் அழகாகத் துள்ளிக் குதித்து பந்து விளையாடினாள்.

இவள் திருமகளோ, இரதிதேவியோ, தேவலோகத்து அரம்பையோ, இவள் அன்று அசுரரை மயக்கிய மோகினியோ என்று அவளைக் கண்டோர் தம்மை மறந்து வியந்து நின்றனர். மனம் முந்தியதோ? விழி முந்தியதோ? கரம் முந்தியதோ? எனும்படியாக அவள் துள்ளித்துள்ளிப் பந்தாடினாள். சந்திரனைச் சூடிய குறும் பலாஈசர் உலாவரும் வீதியில் பசியவளையல் அணிந்த வசந்தவல்லி பந்தாடினாள்.

பூங்கொத்துகள் சூடிய அழகியக் கூந்தல் அவிழ்ந்த நிலையில் அவள் முன்னால் அடியிட்டுப் பின்னால் அடியிட்டு அடையும்

மூன்று நான்கடி நடந்து சென்றும், இடதும் வலதுமாகச் சுற்றி வந்தவளாக வசந்தவல்லி தம் தோழிகளுடன் சேர்ந்து பந்தாடினாள். கொடிய காமனின் படையாக அவளைப் பார்த்த ஆண்கள், இவளைப் பார்க்க பிரம்மன் நமக்கு ஆயிரம் கண்களைப் படைக்கவில்லையே என்று எண்ணி ஏங்கினர்.

வசந்தவல்லி அழகாகப் பந்து விளையாடியதைக் குற்றாலக்குறவஞ்சி கூறுகிறது.

**கம்பராமாயணத்தில் பந்து விளையாடல்**

கோசலநாட்டு சந்தனச்சோலையில் இளம் பெண்கள் பந்து விளையாடுகின்றனர் என்பதை,

> **"பந்தினை இளையவர் பயில் இடம் மயில்**
> **(கம்பராமாயணம்-பாலகாண்டம்-நாட்டுப்படலம்80)**

என்ற பாடலடி மூலம் அறியமுடிகிறது.

மகளிர் பந்துகளைக்கொண்டு விளையாடுவார்கள். அப்போது அவருடைய ஆபரணங்களிலிருந்து முத்துக் கூட்டங்கள் கீழே சிந்தும். அவற்றை பல பணிப் பெண்கள் திரட்டி ஓரிடத்தில் குவிப்பார்கள். அவ்வாறு குவிந்த முத்துக் குவியல்கள், சந்திரனது ஒளி மங்கும்படி குளிர் தர வெள்ளொளியைப் பெருகச் செய்தன என்பதை,

> **"பந்துகள் மடந்தையர் பயிற்று வாரிடைச்**
> **சிந்துவ முத்தினம் அவை திரட்டுவார்**
> **அந்தம்இல் சிலதியர் அகற்று குப்பைகள்**
> **சந்திரன் ஒளிகெட தழைப்ப தண் நிலா"**
> **(நகரப்படலம் 138)**

என்ற பாடலடி மூலம் அறியமுடிகிறது.

**முடிவுரை**

மகளிர் பந்து விளையாடும் இடம், பந்து அமைத்த முறை, பந்தின் வகைகள் ஆகியவற்றை அறியமுடிகிறது. சீவகசிந்தாமணியில் விமலையாரும், குணமாலையும் பந்து விளையாடியதையும், சிலப்பதிகாரத்தில் மகளிர் பந்து விளையாடியதையும், பெருங்கதையில் மானனீகை பந்து விளையாடியதையும், குற்றாலக்குறவஞ்சியில் வசந்தவல்லி பந்து விளையாடியதையும் காணமுடிகிறது. மகளிர் பந்து விளையாடும்போது அணிந்துள்ள அணிகலன்களும், அலங்காரமும் கலையுமாறு துள்ளித் துள்ளி விளையாடினர் என்பதையும் அறியமுடிகிறது.

**துணை நூற்பட்டியல்**

1. இளம்பூரணர். 1953. உரை, தொல்காப்பியம்-பொருளதிகாரம். சென்னை, திருநெல்வேலி தென்னிந்திய சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம் லிமிடெட்.
2. நாகராசன், வி. 2004. (உரை.ஆ) பத்துப்பாட்டு மூலமும் உரையும். சென்னை, முதல், இரண்டு தொகுதி நியூ செஞ்சுரி செஞ்சுரி புக் ஹவுஸ் (பிரைவேட்) லிமிடேட்.
3. பாலசுப்பிரமணியன், கு.வை. 2004. (உரை.ஆ) நற்றிணை மூலமும் உரையும். 2004. சென்னை, நிய செஞ்சுரி புக் ஹவுஸ் (பிரைவேட்) லிமிடேட்.
4. பாலசுப்பிரமணியன், கு.வை 2004. (உரை.ஆ) புறநானூறு மூலமும் உரையும். சென்னை, நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பிரைவேட்) லிமிடேட்.
5. புலியூர்க் கேசிகன்,. 2009. திருக்குற்றாலக்குறவஞ்சி மூலமும் உரையும். சென்னை, சாரதா பதிப்பகம்.
6. பூவண்ணன். 2011. கம்பராமாயணம் மூலமும் தெளிவுரையும் தொகுதி 1,2,3,4,5,6,7,8. சென்னை, வர்த்தமானன் வெளியீடு.
7. விசுவநாதன், அ. 2004. (உரை.ஆ) கலித்தொகை மூலமும் உரையும். சென்னை, நியூசெஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட்.
8. ஸ்ரீ. சந்திரன், ஜெ. 2012. சிலப்பதிகாரம் மூலமும் தெவுரையும். சென்னை. தமிழ் நிலையம்.